**செய்தி வெளியீடு எண்: 806** **நாள்:28.10.2020**

**இன்று (28.10.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமைச் செயலகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய தொடக்க உரை:**

அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவிட் வைரஸ் நோய் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகின்றது. அதன் விளைவாக நோய்ப் பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. முக்கியமாக, மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், நோய்த் தொற்று பரவல் குறைந்து கொண்டே வருகிறது. உங்கள் அனைவருடைய அயராத உழைப்பின் காரணமாகத்தான் இது சாத்தியமாயிற்று. **இதைக் கருத்தில் கொண்டுதான், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், தமிழ்நாட்டை போல் பிற மாநிலங்கள் செயல்பட வேண்டும் என பாராட்டினார்கள்.** தமிழ்நாட்டில் கொரோனா பரவல் குறைந்து வரும் சூழல் நீடிக்கவும், அதனை முழுமையாக தடுக்கவும், நாம் அனைவரும் தொடர்ந்து பாடுபட வேண்டும். அதற்கென நமது நடவடிக்கைகளை மேலும் முனைப்புடன் செயல்படுத்த வேண்டும். **குறிப்பாக நோய்த் தொற்று குறைந்துள்ள நிலையில், பண்டிகை காலங்களில் மக்கள் அதிகமாக கூடுவதை தவிர்த்தல்,** விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவற்றை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும்.

எனது தலைமையில், 11 முறை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன. 10 முறை மருத்துவ வல்லுநர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தலைமைச் செயலாளர் அவர்களுடைய தலைமையில், 11 முறை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி, நோய்த் தொற்றின் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து, தேவையான தளர்வுகளுடன் பொது முடக்கம் மிகவும் கவனமாகவும், பாதுகாப்பாகவும் அமல்படுத்தப்பட்டது.

கோவிட் நோய் தொற்று கட்டுப்பாடு, சிகிச்சை மற்றும் நிவாரணப் பணிகளுக்காக இதுவரை அரசு செலவு ரூபாய் 7,372 கோடியே 25 லட்சம். **மருத்துவம் சார்ந்த செலவினம்** 1,983 கோடி ரூபாயும் , **நிவாரணம் சார்ந்த செலவினம்** 5,389 கோடி ரூபாயும் ஆகும். **அனைத்து மாவட்டங்களிலும் காய்ச்சல் முகாம்கள் தொடர்ந்து நடத்தியும், வீடு வீடாகச் சென்றும், காய்ச்சல்** மற்றும் வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளவர்களைக் கண்டறிந்தும், RTPCR சோதனை, தனிமைப்படுத்துதல், சிகிச்சை அளித்தல் போன்றவை தொடர்ந்து நடைபெற்ற காரணத்தினால் இன்றைக்கு நோய்ப்பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியிருக்கிறது.

தமிழகத்தில் 201 ஆய்வகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் 66 அரசு ஆய்வகங்களும், 135 தனியார் ஆய்வகங்களும் இடம் பெற்றுள்ளன. இதுவரை RTPCR **பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 96.60**

**லட்சம்.** தற்போது நாளொன்றுக்கு சுமார் **80,000 நபர்களுக்கு** RTPCR **பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.** மாநில அளவில் கோவிட் மருத்துவமனைகளிலும், கோவிட் சிறப்பு மையங்களிலும் **1,39,098** படுக்கைகளும், இதில் ஆக்சிஜன் வசதிகளுடன் கூடிய **34,506** படுக்கைகளும் ICU வசதி கொண்ட **7,666** படுக்கைகளும், **6,517** வென்டிலேட்டர்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அரசால் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மிகவும் இன்றியமையாத மற்றும் **உயிர்காக்கும் மருந்துகளான டொஸிலிசுமாப் (Tocilizumab) 400 எம்ஜி, ரெம்டெஸ்விர் (Remdesvir) 100 எம்ஜி, இனாக்சபெரின் (Enoxaparin) 40 எம்ஜி** போன்றவை கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. மருந்துகள், **பரிசோதனைக் கருவிகள்**, N95 முகக்கவசங்கள், பாதுகாப்பு உடைகள் (PPE Kits), மும்முடி முகக்கவசங்கள், CT ஸ்கேன், X-ray இயந்திரங்கள் ஆகியவற்றை தேவையான அளவில் தொடர்ந்து கொள்முதல் செய்து நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிப்பதற்கு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

களப்பணியில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும், கட்டுப்பாட்டு பகுதியில் வாழும் மக்களுக்கும், **ஜிங்க் (zinc) மற்றும் வைட்டமின்** மாத்திரைகள் இலவசமாக கொடுக்கப்பட்டு வருகிறது. இந்திய முறை மருத்துவ (Ayush) சிகிச்சை – நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிப்பதற்காக சித்த மருந்தான **கபசுர குடிநீர்** பெரும்பான்மையான

மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டதன் விளைவாக நோய்ப் பரவல் படிப்படியாக குறைக்கப்பட்டிருக்கிறது.

கோவிட் நோய்க்கான சிறப்பு சிகிச்சை அளிக்க, கூடுதலாக **15,000 மருத்துவ பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர். இதில்** சுமார் **2,751** மருத்துவர்கள், **6,893** செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவ பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். **சாதாரண காய்ச்சல் மற்றும் மற்ற ஏனைய நோய்களுக்கு உடனடியாக பொதுமக்கள் சிகிச்சை பெற தமிழ்நாடு முழுவதும், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு உதவியாளருடன் 2,000 Mini Clinic துவங்க அரசால் திட்டமிடப்பட்டு, அதற்கான இடங்களை தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த Mini Clinic-களில் நோயாளிகளை பரிசோதனை செய்யப்படுகிறது. நோய் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு அந்தப் பகுதியிலேயே உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய் கடுமையாக இருந்தால், மேல்சிகிச்சைக்காக அந்தப் பகுதியிலுள்ள மருத்துவமனைக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.**

நமது மருத்துவர்களின் சிறப்பான சேவையால், நோய்த் தொற்று **7.39** சதவிகிதத்திற்கு கீழ் கொண்டு வரப்பட்டு, நோய் பரவல் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது. கடந்த **17** நாட்களாக ஒவ்வொரு நாளும் நோய்த் தொற்றின் எண்ணிக்கை **5,000** நபர்களுக்கு கீழாகவே உள்ளது. கடந்த **4** நாட்களாக **3,000** நபர்களுக்கு கீழாகவே உள்ளது. சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை **50,000**ல் இருந்து தற்போது **30,000** நபர்கள் வரை குறைந்து உள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, **நாட்டிலேயே சிகிச்சை முடிந்து குணமானவர்களுடைய எண்ணிக்கை 6,75,518. இது 94.57 சதவீதமாகும். இறப்பு விகிதம் 1.53 சதவீதம்தான் இறப்பு உள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.** இறப்பு விகிதத்தை மேலும் குறைக்கும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

**அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கோவிட் நோய் சிகிச்சை குறித்த நிலையான வழிமுறைகள் கடைப்பிக்கப்படுகின்றனவா ? என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.** கோவிட் சிறப்பு மையங்களில் உணவு, குடிநீர், கழிப்பிட மற்றும் பிற வசதிகளை அவ்வப்போது மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து சிகிச்சை பெறுபவர்களுக்கு முழுமையான உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதுவரை, 46 இலட்சம் மறுமுறை உபயோகிக்கத்தக்க முகக் கவசங்களை சென்னையில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. பிற மாவட்டங்களில், இதுவரை 4.95 கோடி முகக்கவசங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஏழைகள், சிறு தொழில் செய்வோர், சிறு வணிகம் செய்வோர் போன்றோரின் பொருளாதார நிலையை பாதுகாக்க தமிழ்நாட்டில்

உணவுப் பொருட்களை விலையின்றி வழங்குதல், ரொக்க நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா காலத்தில் கூட, இதுவரை 55 புதிய தொழில் திட்டங்கள் தமிழ்நாட்டில் துவங்குவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதன் மூலம், சுமார் 40,718 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. சுமார் 74,212 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன. இந்நடவடிக்கைகளால், நடப்பாண்டில் **அதிக புதிய முதலீடுகளை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கியதில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு** உள்ளது.

**மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த சிறப்பான நடவடிக்கைகளால், அரசின் நலத்திட்டங்கள் மக்களை பெருமளவில் சென்று சேர்ந்துள்ளது.** மக்களைப் பொருளாதார பாதிப்பில் இருந்து பாதுகாத்து, வேலைவாய்ப்பின்மை இரண்டே மாதங்களில், ஆறில் ஒரு பங்காக சரிந்துள்ளது. தனி நபர் வருவாய் படிப்படியாய் உயர்ந்து கொரோனா சூழலால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பிலிருந்து தமிழ்நாடு விரைந்து மீண்டு வருகிறது என ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த 12.10.2020 அன்று மாநில பேரிடர் மேலாண்மை குழுவின் பருவமழை முன்னேற்பாடு ஆய்வுக் கூட்டம் எனது தலைமையில் நடைபெற்றது. தற்போது, பருவமழை காலம் தொடங்க உள்ளது. இந்த வருடம் இயல்பான அளவில் மழைப்பொழிவு இருக்கும். அனைத்து

மாவட்டங்களும், குறிப்பாக கடலோர மாவட்டங்கள் பருவ மழைக்கு முன்னதாகவே நீர்நிலை உட்கட்டமைப்புகளான கால்வாய்கள், அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளின் கதவுகள், மற்றும் கரைகளை கண்காணித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புயல் காப்பகங்கள், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளுடன் கிருமி நீக்கம் செய்து அவசர காலத்தில் பயன்படுத்துவதற்கு ஏற்ற வண்ணம் தயார் நிலையில் இருக்க வேண்டும். தேவைப்பட்டால், கூடுதல் காப்பகங்களை கண்டறிந்து அவற்றையும் தயார் செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். **மலை மாவட்டங்களில்** மண் சரிவு ஏற்படும் இடங்களை கண்டறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தும், மரங்கள் விழுந்தால் அகற்றுவதற்கு தேவையான உபகரணங்களை இருப்பில் வைத்தும் மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

நாம் முன்னரே திட்டமிட்டு நீர்நிலைகளை தூர் வாரியது, ஆழப்படுத்தியது, வாய்க்கால்களை சீரமைத்தது போன்ற பணிகளினால், முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்தாண்டு 4 லட்சத்து 12 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவை வேளாண் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. **மாவட்ட ஆட்சியர்கள், நெல் கொள்முதல்** நிலையங்களை விவசாயிகளின் தேவைக்கேற்ப கூடுதலாக தொடங்க வேண்டும். அதேபோல், நெல் கொள்முதல் நிலையங்களில் அறுவடை செய்யப்பட்டு கொண்டு வரப்படும் நெல் மூட்டைகளை பாதுகாக்க,

போதுமான அளவு தார்பாய்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வரலாற்று சாதனையாக மாண்புமிகு அம்மாவின் அரசு 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று மிகக் குறுகிய காலத்திலேயே அவற்றிற்கான கட்டுமானப் பணிகளை துவக்கி உள்ளது. நான் ஏற்கனவே கடந்த கூட்டத்தில் அறிவுறுத்தியது போல அப்பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் கள ஆய்வு செய்து, பணியினை விரைந்து முடிக்க தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து** திரையரங்குகளை திறக்க கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. அதுபற்றி தற்போது நடைபெறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் மற்றும் மருத்துவ நிபுணர்கள் குழு ஆய்வுக் கூட்டத்திற்கு பின், மருத்துவ நிபுணர்கள் கூறும் கருத்துக்களின் அடிப்படையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**கோயம்பேடு வளாகத்தில்** உணவு தானிய விற்பனை அங்காடிகளும், மொத்த காய்கறி விற்பனை அங்காடிகளும் திறக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன. தற்போது சுமார் 7,500 வியாபாரிகள் தினமும் இந்த அங்காடியை பயன்படுத்தி வருகின்றனர். இங்கு நோய்ப் பரவல் தடுப்பை உறுதி செய்ய தினசரி கிருமி நாசினி தெளித்தல், சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் மற்றும் மருத்துவப் பரிசோதனையும் செய்யப்பட்டு வருகிறது. இத்தீவிர நோய்த் தடுப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும், பெருநகர சென்னை

மாநகராட்சி ஆணையர் பார்த்துக் கொள்ளவேண்டும். இதுசம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அவ்வப்போது ஆய்வு செய்து நோய்ப் பரவலைத் தடுப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த ஆலோசனைக் கூட்டத்தின் வாயிலாக அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தற்காலிக இடத்தில் செயல்படும் **பழக்கடை மொத்த வியாபாரம், பழம் மற்றும் காய்கறி சில்லரை வியாபாரக் கடைகளை திறப்பதற்கு தொடர்ந்து கோரிக்கைகள்** வந்தவண்ணம் உள்ளன. தொழிலாளர்கள், வியாபாரிகள் மற்றும் அங்காடியைச் சார்ந்துள்ள அனைவரது வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டும், அதேநேரத்தில் பொதுமக்களுக்கு குறைவான விலையில் காய்கறி, கனிகள் கிடைத்திட ஏதுவாகவும், சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்தாலோசித்து, கோரிக்கை குறித்து உரிய நேரத்தில் அரசு முடிவெடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீபாவளி போன்ற பண்டிகைகள் வருவதால், பொதுமக்கள் பொது இடங்களில் கூடுவதை தொடர்ந்து கண்காணித்து, தொற்று ஏற்படாவண்ணம் முகக்கவசம், தனி நபர் இடைவெளி ஆகியவற்றை தவறாமல் கடைப்பிடிக்க **ஒலிபெருக்கிகள் மூலம் விழிப்புணர்வினை** தொடர்ந்து ஏற்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நோய்ப் பரவல் தமிழகத்தில் படிப்படியாக குறைந்து வருகின்றன. இந்த சூழ்நிலையில் பள்ளிகள், கல்லூரிகள் திறப்பது

குறித்தும், இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூறுகின்ற ஆலோசனைகள், மருத்துவ நிபுணர்கள் கூறுகின்ற ஆலோசனைப்படி அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

வேளாண் பணிகளைப் பொறுத்தவரை 100 சதவீதப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, 100 சதவீதப் பணியாளர்களை வைத்து தொழிற்சாலைகள் இயங்கலாம் என ஏற்கனவே அறிவிப்பு வெளியிடப்பட்டு, தொழிற்சாலைகள் 100 சதவீதப் பணியாளர்களை வைத்து இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு தொழிற்சாலைகளில், 90 சதவீதத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வைத்து தொழிற்சாலைகள் இயங்கி வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்தவரை, பருவமழை நன்றாக பெய்ததன் காரணத்தால், தமிழகத்தில் குடிநீர் பிரச்சினை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியத்திலிருக்கின்ற அனைத்து நிர்வாகத்தின் உயரதிகாரிகளும் சரியான முறையில் நடவடிக்கை எடுத்த காரணத்தால், தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மக்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் முழுமையாக வழங்கப்பட்டு வருகிறது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களெல்லாம் அன்றைக்கு குறிப்பிட்டார்கள், அதாவது தமிழகத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. அண்டை மாநிலத்தில் தளர்வுகள் அதிகமாக இருக்கின்றன, ஆகவே, இங்கேயும் தளர்வுகள் வேண்டும். அங்கே தொற்று நோயை கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளார்கள் என்ற செய்தியையெல்லாம் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த அரசின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக உண்மைக்கு புறம்பான செய்தியை தொடர்ந்து வெளியிட்டார்கள். இன்றைக்கு அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக நமது உயரதிகாரிகள் அரசின் ஆலோசனைகளைப் பெற்று தகுந்த நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, இன்றைக்கு நோய்ப் பரவல் படிப்படியாக குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களெல்லாம் அன்றையதினம் அண்டை மாநிலத்தை ஒப்பிட்டு குறிப்பிட்டார்கள். தமிழகத்தில் தளர்வுகள் இல்லாமல் கடுமையாக்கப்பட்டிருக்கிறது. இதனால் தொழில்கள் முடங்குகின்றன, பல்வேறு பணிகள் முடங்குகின்றன என்ற செய்தியையெல்லாம் வெளியிட்டார்கள். இன்றைக்கு நிலைமை என்ன? மாண்புமிகு அம்மாவின் அரசு சரியான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இன்றைக்கு நோய்ப் பரவல் படிப்படியாக குறைந்து, இயல்பு நிலைக்கு திரும்பக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அண்டை மாநிலத்தில், அவர்கள் குறிப்பிட்ட அந்த மாநிலங்களிலெல்லாம் இன்றையதினம் அதிக அளவில் கொரோனா வைரஸ் பரவல் இருந்து வருகிறது. வெளி

நாட்டிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்து வருபவர்களும் கட்டாயம் பரிசோதனை செய்த கொண்டுதான் தங்களுடைய மாநிலங்களுக்கு வரவேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விதித்துள்ளதாக செய்தி வருகின்றது. இதை எதற்காக சொல்கிறேன் என்றால், இன்றைக்கு அரசு எடுத்த நடவடிக்கையை வேண்டுமென்றே சிலர் கொச்சைப்படுத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அரசு எடுக்கின்ற நடவடிக்கையின் மூலமாகத்தான் நமது அரசு அதிகாரிகள் தங்களின் குடும்பத்தை மறந்து நாட்டு மக்களைக் காக்க வேண்டுமென்று கருதி, தன்னையே முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றினார்கள். அப்படி பணியாற்றுகின்றபொழுது பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் தங்கள் உயிரை நீத்திருக்கின்றார்கள், அதையெல்லாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இது ஒரு புதிய நோய். தமிழ்நாடு அரசு அதை கட்டுப்படுத்தத் தவறியதைப் போலவும் தினந்தோறும் அறிக்கை விட்டு மக்களை குழப்பி அரசியல் ஆதாயம் தேடுவதை இனிமேல் நிறுத்திக் கொள்ள வேண்டும். அரசு சரியான முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த கூடுதல் தலைமைச் செயலாளர்கள் அந்தஸ்தில் உள்ளவர்கள், முதன்மைச் செயலாளர் அந்தஸ்தில் உள்ளவர்கள், அரசு செயலாளர்கள், அரசு உயரதிகாரிகள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் ஆகியோரது கருத்துக்களைக் கேட்டுத்தான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாகத்தான், தமிழகத்தில் நோய்ப் பரவல் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அர்ப்பணிப்பு உணர்வோடு அரசு தெரிவித்த ஆலோசனைகளைப் பின்பற்றி, சரியான முறையில் நடவடிக்கை எடுத்த அனைத்து அரசு உயரதிகாரிகளுக்கும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**புரட்சித் தலைவி அம்மாவின் அரசு பல்வேறு சாதனைகளை புரிந்து கொண்டிருக்கிறது. நோய்ப் பரவல் இருக்கின்ற இந்த காலத்தில் கூட, எல்லா துறைகளிலும் தங்குதடையில்லாமல் வளர்ச்சியை காண முடிந்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.**

அரசின் கோவிட் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து முழு ஒத்துழைப்பு வழங்கி வரும் பொதுமக்களுக்கும், செம்மையான முறையில் பணியாற்றி வருகின்ற அனைத்து அரசு அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், மீண்டும் ஒருமுறை எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொது மக்களின் நலன் கருதி, அரசு எடுத்து வரும் கோவிட் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்திற்கும் பொது மக்கள் தொடர்ந்து முழு ஒத்துழைப்பினை நல்குமாறு அன்போடு கேட்டுக் கொண்டு எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**